# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்
## ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

## MCOP No.2728/2025

| | |
|---|---|
| **சாட்சியின் வரிசை எண்** | மசா1 |
| **பெயர்** | இம்தியாஸ் |
| **க/த.பெயர்** | மொகமது நாஜீப் |
| **வயது** | 25 |
| **விலாசம்** | ரெட்டியார்பாளையம், பாண்டிசேரி |
| **தொழில்** | ..... |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6ன் படி சத்திய பிராமணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 09.02.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். வாகன விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இதில் என்னை எனது தரப்பில் முதல் சாட்சியாக விசாரித்து கொண்டு எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். இதில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்துக்கொள்ள வேண்டுகிறேன். முதல் தகவல் அறிக்கை மசாஆ1, விபத்து பதிவு சான்று நகல் மசாஆ2, எம்.ஜி.எம் மருத்துவமனையின் ஸ்கேன் ரிபோட் மசாஆ3, எம்.ஜி.எம் மருத்துவமனையின் விடுவிப்பு சான்றிதழ் மசாஆ4, ஜிப்மர் மருத்துவமனையின் விடுவிப்பு சான்றிதழ் மசாஆ5, ஜிப்மர் மருத்துவமனையின்

சிகிச்சை ஆவணம் மசாஆ6, காயச்சான்றிதழ் மசாஆ7, எம்.ஜி.எம் மருத்துவமனையின் மருத்துவ செலவு ரசீதுகள் மசாஆ8, புதுவை டெண்டல் மருத்துவமனையின் மருத்துவ செலவு ரசீதுகள் மசாஆ9, இருசக்கர வகனம் செலவு ரசீதுகள் 10, மனுதாரரின் வேலை சேர்க்கை கடிதம் மசாஆ11, மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் மசாஆ12, மனுதாரரின் ஆதார் அட்டை நகல் மசாஆ13, மனுதாரரின் பான் அட்டை நகல் மசாஆ14, மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல் மசாஆ15, மனுதாரரின் மோட்டார் சைக்கில் வாகனத்தின் பதிவு சான்று நகல் மசாஆ16.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது,

**5 வது நீதிபதி**
**சென்னை**